10.06.2025

OS No: 187/2021

வா.சா.2 திரு.சொக்கலிங்கம், த/பெ. சேதுராமன்

**<u>1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 2 பிரதிவாதிகளை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். தாவாச் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண். 50/2ஏ ஆகும். தாவா சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் நீலாவிற்கு பாத்தியம். நீலா எந்த ஊர் என்றால் மேலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். நீலா சொத்தை கிரையம் கொடுப்பதற்கு நீலாவிடம் யார் போய் கிரையம் கேட்டோம் என்றால் நானும், நீலாவின் கணவரும் போய் கேட்டோம். சொத்தை நீலா எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் கொடுக்க இருந்தார் என்றால் ரூ.70,000க்கு கிரையம் கொடுக்க இருந்தார். சொத்து கிரையம் பெற்ற சமயத்தில் வாதி பெரியண்ணனுக்கு திருமணம் ஆகியிருந்ததா என்றால் இல்லை. வாதி எந்த வருடம் வெளிநாடு சென்றார் என்றால் எந்த வருடம் என்று தெரியாது. வாதி எந்த நாட்டிற்கு போனார் என்றால் தெரியாது. வாதிக்கு வெளிநாட்டில் எவ்வளவு சம்பளம் என்றால் தெரியாது. வாதி வெளிநாட்டிலிருந்து எனக்கு பணத்தை நேரடியாக அனுப்பினாரா என்றால் கொட்டாம்பட்டியில் உள்ள ஒரு நபருக்கு அனுப்பினார், எனக்கு அனுப்பவில்லை. வாதி வெளிநாட்டிலிருந்து அவரது தந்தைக்கு பணத்தை நேரடியாக அனுப்பவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் நில புலம் உள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி 200 செம்மறி ஆடுகள், 100 வெள்ளாடுகள், 10 பால்மாடுகள், 4 உழவு மாடு வைத்திருந்தார் என்றால் சரியல்ல, 4,5 பசு மாடுகள் வைத்திருந்தார், 10 செம்மறி ஆடு வைத்திருந்தார் 4,5 வெள்ளாடு வைத்திருந்தார். 1ம் பிரதிவாதி ஆடு, மாடு வைத்திருந்ததின் எண்ணிக்கையை வழக்கிற்காக குறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வெளிநாடு சென்றதற்கு யார் பணம் கொடுத்தது என்றால் தெரியாது. வாதி எந்த வருடம் வெளிநாட்டிலிருந்து வந்தார் என்றால் தெரியாது. வெளிநாட்டிலிருந்த வந்த வாதி மீண்டும் சிங்கப்பூருக்குச் சென்றாரா என்றால் வேறு

நாட்டுக்குப்போனார். வாதி வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை சீட்டு விளையாடியும், குடித்தும் செலவு செய்துவிட்டார் என்றும், வெளிநாட்டிலிருந்து வாதி திரும்பி வர 1ம் பிரதிவாதி தான் பணம் செலவு செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுயமாக சம்பாதித்து பெற்ற பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரியல்ல. 2010ம் வருடம் வாதி அவருடைய தந்தையான 1ம் பிரதிவாதியை வங்கியில் கடன் பெற வேண்டும் என்றும், அதற்கு சாட்சி கையெழுத்து போடவேண்டும என்றும் அழைத்துச் சென்று 1ம் பிரதிவாதியின் படிப்பறிவு தன்மையை கருத்தில் கொண்டு இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. மேற்படி இனாம்செட்டில்மெண்ட் பத்திரத்தை 1ம் பிரதிவாதி ரத்து செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி எந்த ஊரில் திருமணம் செய்தார் என்றால் சிங்கம்புணரியில் திருமணம் செய்தார். வாதி தற்போது எங்கு உள்ளார் என்றால் 6,7 வருடங்களாக சிங்கம்புணரியில் இருக்கிறார். வாதி திருமணம் முடிந்த காலத்திலிருந்து சிங்கம்புணரியில் தான் இருக்கிறார் என்றால் சரியல்ல, மேலப்பட்டி கிராமத்தில் இருந்து வருகிறார். தாவாச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி இதயத்தில் பிரச்சனை ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கு 2ம் பிரதிவாதி தான் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல, வாதி மற்றும் 2ம் பிரதிவாதி இருவரும் கொடுத்தனர். 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட விபத்து காயத்திற்கு ரூ.2லட்சத்தை 2ம் பிரதிவாதி செலவு செய்தார் என்றால் வாதியும், 2ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் செலவு செய்தனர். இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கிய விபரம் தெரிந்தவுடன் வாதியும், அவரது தந்தையும் பேசிக் கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பழனியப்பன் என்ன வேலை பார்க்கிறார் என்றால் பஞ்சாயத்து கிளர்க்காக வேலை பார்க்கிறார். 2007ம் வருடம் ரோடு போடுவது சம்மந்தமாக எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் ரோடு போடுவது சம்மந்தமாக

இல்லை, ஊருக்கு இரண்டு வேளை தண்ணீர் கொடுப்பதற்கு பதில் ஒரு வேளை மட்டும் தண்ணீர் கிடைத்தற்கு இன்னும் ஒரு நீர்த்தொட்டி அமைத்தால் நன்றாக இருக்குமென நான் சொன்னேன், அதை நீ ஏன் சொல்கிறாய் என 2ம் பிரதிவாதி என்னிடம் கேட்டார். நான், 2ம் பிரதிவாதியை அடித்தேன் என்பதற்காக என் மீது காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். மேற்படி வழக்கின் பேரில் நான் 7 நாட்கள் சிறையில் இருந்ததால் 2ம் பிரதிவாதியை பழிவாங்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னை வெளிநாட்டிலிருந்து தொடர்பு கொண்டு சொத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்திட கேட்கவும் இல்லை, அதற்காக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 1ம் பிரதிவாதி பெயரிலான கிரையத்திற்கு நானோ, எனது நண்பரோ உதவியிருந்தால் கிரையப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்திருப்போம் என்றும், அவ்வாறு இல்லை என்பதால் தான்கிரையப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.06.10 16:54:39 +0530